**செய்தி வெளியீடு எண்: 08/2024** **நாள்: 09.01.2024**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில்**
**தொழில் நடத்தும் உரிமையாளர்களுடன் சந்திப்பு கூட்டம்**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், பல்வேறு மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் அதைச் சார்ந்த பகுதிகளில் பயணிகளின் தேவைக்காக தொழில் நடத்திவரும் உரிமம் பெற்ற உரிமையாளர்கள் உடனான இரண்டாவது வாடிக்கையாளர் சந்திப்பு கூட்டம் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் நிதி இயக்குநர் டாக்டர். பிரசன்ன குமார் ஆச்சார்யா தலைமையில் நடைபெற்றது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை பொது மேலாளர் ஆர்.எம்.கிருஷ்ணன் (திட்டமிடல் மற்றும் வணிக வளர்ச்சி) முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், களபணியாளர்கள், கடை உரிமையாளர்கள் கலந்து கொண்டு பல்வேறு சவால்கள் மற்றும் சாத்தியமான வழிகளை புரிந்துகொண்டனர்.

இரண்டாவது முறையாக இணக்கமான நல்ல சூழலில் வாடிக்கையாளர் சந்திப்பு கூட்டத்தை நடத்தியது பெரும் வரவேற்பை பெற்றதாக அமைந்தது. இந்த கூட்டத்தில், உரிமம் பெற்றவர்கள் சேவைகளுக்கான தங்கள் விருப்பங்கள் / சிக்கல்கள் பற்றி விவாதித்துள்ளனர். மெட்ரோ நிலையங்களில் உள்ள உள்கட்டமைப்பின் சிறந்த வணிகப் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கான பல்வேறு மேம்பாடுகளுக்கு உரிமம் பெற்றவர்களிடமிருந்து பரிந்துரைகள் வரவேற்கப்பட்டன. உகந்த மதிப்பு கூட்டுதலுக்காக இணைந்து செயல்பட கூட்டாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**